unicef
for every child

inklink
InkLink Charitable Trust
Education Empowerment Environment Creativity Empathy




# கோவிட் - 19

## சமூக ரீதியிலான களங்கப்படுத்துதல் மற்றும் பாகுபாடு காட்டுதலுக்கு எதிரான குழந்தைகளின் குரல்

**இது
குழந்தைகளின்
முதற்கட்ட முயற்சி**



என்ன..னன.. அம்மா..மா.. அது??
ஐய்யோ..! உன் பக்கத்துவீட்டில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியைப் பார்த்தாயா? அவர்கள் செய்த தவறைப் பற்றிதான் அனைவரும் பேசுகின்றனர்.
வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தவங்க அவங்க..! அவங்களோட சேராதீங்க.. அவங்களுக்கு உயிர்க்கொல்லி கொரோனா வைரஸ் இருக்கு!
அவங்க ஆபத்தானவங்க!
ஓ.ஓ...! அப்பா.. அம்மா, நீங்க சொல்றது தப்பு! நா பேப்பர்ல படிச்சிருக்கேன், டி.விலயும் பார்த்திருக்கேன்.. இதுல கவலைப்படுறதுக்கு ஒன்னுமே இல்ல. ஜாதி, மதம், இனம், மொழி, நாடு மற்றும் வயது வித்தியாசம் இன்றி யாருக்கு வேண்டுமானாலும், இந்த கொரோனா வைரஸ் நோய் அல்லது கோவிட்-19 தொற்று ஏற்படலாம். நாம் அனைவரிடமும் அன்பாய் இருப்போம். ஏனெனில், நாம் அனைவரும் இதில் ஒன்றிணைந்திருக்கிறோம்!

## பாகுபடுத்துதல் என்பது தவறானது!




கொரோனா வைரஸ் **எந்த மனிதரையும்** தாக்கலாம் என்பதை மக்கள் முதலில் உணர வேண்டும். ஒருவருடைய இனம், நடத்தை, உணவுப் பழக்கம், தொழில் போன்றவற்றைக் காரணம் காட்டி ஒருவரை களங்கப்படுத்துதல் அல்லது பாகுபடுத்துதல் எந்தவிதத்தில் இருந்தாலும் சரி, அது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது அல்ல. மேலும் 'கொரோனா வைரஸ் உடையவர்" என நாம் முத்திரை குத்தப்பட்டுவிடுவோமோ என்ற அச்சத்தில் பலரும் தனக்கு கொரோனா இல்லை என நடிக்க / ஏமாற்ற வாய்ப்புள்ளது. இதுபோன்ற செயல் நம் அனைவருக்குமே ஆபத்தானதாக முடிந்துவிடலாம்.

நம்முடைய செல்லப் பிராணிகளிடமும் நாம் இரக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும். இவையனைத்தும் மனிதத்தன்மை மற்றும் அன்பை வெளிப்படுத்துவதே. தவறான செய்திகள் மற்றும் தவறான நம்பிக்கைகளை திருத்திக்கொள்ள உதவுவது நம் அனைவரின் பொறுப்பாகும்.

## கோவிட்-19ஆல் யாரெல்லாம் பாகுபடுத்துதலுக்கு ஆளாகின்றனர்?



**சில குறிப்பிட்ட சமுதாயங்களைச் சார்ந்தவர்கள்** மற்ற அனைவரையும் விட அதிக பாகுபடுத்துதலை எதிர்கொள்கின்றனர்.



**வெளிநாட்டினர்** பாகுபடுத்துதலை எதிர்கொள்கின்றனர்.



மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், சுகாதாரப் பணியாளர்கள் போன்ற **களத்தில் உள்ள முன்னணிப் பணியாளர்கள்** களங்கப்படுத்தப்படுதல் மற்றும் ஒதுக்கப்படுதலுக்கு ஆளாகின்றனர்.



**உணவுப் பழக்க வழக்கங்களை** வைத்து மக்கள் மதிப்பிடப்படுகிறார்கள்!



செல்லப் பிராணிகள் கோவிட்-19ஐ பரப்பும் என்ற தவறான நம்பிக்கையால் சிலர் தங்கள் **செல்லப் பிராணிகளை அனாதையாய்** கைவிட்டுவிடுகிறார்கள்.




தற்போதுவரை நாய் மற்றும் பூனை போன்ற செல்லப் பிராணிகள் கோவிட்-19 தொற்றை மனிதர்களுக்கு ஏற்படுத்தியதாக எந்த ஒரு ஆதாரமும் இல்லை என உலக சுகாதார நிறுவனம் (WHO) கூறியுள்ளது.

# நாம் ஒருவருக்கொருவர் உதவுவதற்கும் நம் ஒற்றுமையை வலுவாக்குவதற்குமான நேரம் இது!



# களங்கப்படுத்துதல் மற்றும் ஒதுக்கப்படுதலுக்கு பொய்யான தகவல்கள் மற்றும் வதந்திகளே காரணமாகின்றன.







கோவிட்-19லிருந்து நலமடைந்து வீடுதிரும்பியவர்களின் நம்பிக்கைக் கதைகளைப் பகிருங்கள். நோய்த் தொற்று பெற்றவர்கள் அல்லது வீட்டுக் கண்காணிப்பில் இருப்பவர்களின் பெயரையோ, அடையாளங்களையோ சமூக வலைத் தளங்களில் பகிராதீர்கள்.

**தவறான தகவல்களைப் பகிர்வதைத் தவிர்க்கவும்!**






சிகிச்சை பெற்று வருபவர்களை கோவிட்19 நோயாளிகள் என்று கூறுவதைத் தவிர்த்து, “கோவிட்-19லிருந்து குணமடைந்து வருபவர்கள்” என்று அழையுங்கள்.

**இந்த இக்கட்டான சூழலில் கடுமையாக உழைக்கும் மக்களை நாம் மதிப்புடனும் அன்புடனும் நடத்துவோம். நமக்கு உதவுவதற்காக அவர்கள் இருக்கிறார்கள்!**



அத்தியாவசிய சேவைகளை நமக்கு வழங்க பாடுபடும் பணியாளர்களை நாம் பாராட்டுவோம் மற்றும் அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு நாம் உறுதுணையாக இருப்போம்.




அவர்களுக்கு "நன்றி" எனக் கூறுங்கள். நம்முடைய பாதுகாப்பிற்காக அவர்களுடைய வாழ்வையே பணயம் வைக்கிறார்கள்.


கோவிட்-19ஐ காரணம் காட்டி பிற மதத்தினரிடமோ, பிற நாட்டினரிடமோ நாம் பேதம் காட்டக்கூடாது. ஜாதி, மதம், இனம், மொழிக்கு அப்பாற்பட்டு இந்த வைரஸ் தொற்று யாருக்கு வேண்டுமானலும் வரலாம்.
வேற்றுமையிலும் ஒற்றுமை காப்பதே நமது பலம்!
இது ஒரு உலகளாவிய தொற்றுநோய். எனவே, நாம் ஒன்றிணைந்து வருங்காலம் நமக்கு நன்றாக அமையப் போராடுவோம்.

# குழந்தைகளின் முதற்கட்ட முயற்சியைப் பற்றி

**கோவிட்19** எனும் இந்த குழந்தைநேயப் புத்தகத்தை இன்க் லிங்க் அறக்கட்டளை யுனிசெஃப் – தமிழ்நாடு மற்றும் கேரளா அலுவலகத்துடன் இணைந்து உருவாக்கியுள்ளது. குழந்தைகளிடம் தேவையற்ற அச்சம் மற்றும் பதட்டத்தை நீக்கி, அவர்களை வழிகாட்டும் வகையில் கோவிட்19 பாதிப்பின் எதிர்மறை அம்சங்களான, சமூக களங்கப்படுத்துதல் மற்றும் பாகுபாடுபடுத்தலுக்கு மக்கள் எவ்வாறு உள்ளாகின்றனர் என்பதை குழந்தைகள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கார்ட்டுன்களாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

இன்க் லிங்க் அறக்கட்டளையின் டிஜிட்டல் வழிகாட்டுதல் மூலம் படைப்புகள், கலைக்கூறுகள் அனைத்தும் வீட்டிலிருந்தபடியே குழந்தைகளால் உருவாக்கப்பட்டது. ஓவியங்கள் மற்றும் கதை அனைத்தும் இன்க் லிங்க்ன் படைப்பாற்றல் கொண்ட இளங்குழுவினரால் டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்டது.



inklink
Education Empowerment Environment Creativity Empathy
InkLink Charitable Trust

unicef
for every child